**செய்தி வெளியீடு எண்: 79/2025** **நாள்: 09.10.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

**அடையாறில் உள்ள Broken Bridge பகுதி, இந்திரா நகர் இரயில் நிலையம் அருகே உள்ள MRTS வழித்தடத்தின் கீழ் உள்ள பகுதி மற்றும் வேளச்சேரி இரயில் மேம்பாலம் ஆகிய இடங்களில் அழகுபடுத்துதல் மற்றும் இடங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், அடையாறுப் பகுதியில் உள்ள Broken Bridge, இந்திரா நகர் இரயில் நிலையம் அருகில் உள்ள MRTS வழித்தடத்தின் கீழ் உள்ள பகுதி, மற்றும் வேளச்சேரி இரயில் மேம்பாலம் ஆகிய இடங்களை அழகுபடுத்துதல் மற்றும் இடங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்திற்கு (HUDCO Housing and Urban Development Corporation) ரூ.53 லட்சம் மதிப்பில் வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தம் சென்னையின் நகர மேம்பாட்டிற்கான அழகுபடுத்துதல் மற்றும் நவீனமயமாக்கல் பணிகளை முன்னெடுப்பதில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது.

இந்த ஆய்வின் நோக்கம், சுமார் 14,120 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க Broken Bridge பகுதியை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் மேம்படுத்துவதாகும். கூடுதலாக, இந்த ஒப்பந்தம் இந்திரா நகர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள MRTS பாதைக்குக் கீழே (தோராயமாக 6,176 சதுர மீட்டர்) மற்றும் வேளச்சேரி இரயில் மேம்பாலத்தின் கீழே (வேளச்சேரி MRTS நிலையத்திற்கு அருகில் தோராயமாக 9,270 சதுர மீட்டர்) பகுதியை புதுப்பிப்பதற்கான திட்டங்களையும் வகுக்கிறது. இந்த இடங்கள் ஒளிரும் விளக்குகள் (dynamic lighting), சில்லறை விற்பனை நிலையங்கள் (retail outlets), மற்றும் குழந்தைகள் விளையாடும் பகுதிகள் (children's play areas) ஆகியவற்றுடன் கூடிய ஒரு பல்துறைப் பொது இடமாக (multifunctional civic space) மாற்றப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.மு.அ.சித்திக் இ.ஆ.ப., முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக திட்ட இயக்குநர் திரு.தி.அர்ச்சுனன் மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக மேலாண்மை இயக்குநர் திரு.V.T.சுப்பிரமணியன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர்கள் திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), டாக்டர். டி. ஜெபசெல்வின் கிளாட்சன் (ஒப்பந்தம் கொள்முதல்), சென்னை மெட்ரோ

இரயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

"பொது வசதிகளை மேம்படுத்துதல், ஆரோக்கியத்தை ஊக்குவித்தல், மேலும் சுற்றுலா, சமூக ஈடுபாடு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்களை தயாரிப்பதே இந்தப் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும்."

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**